பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 07 2025 **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ஐந்து நாடுகள் பயணத்தின் ஒரு கட்டமாக அர்ஜென்டினா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி சற்றுநேரத்தில் **Buenos aires**-ல் தமது சுற்றுப்பயணத்தை தொடங்க உள்ளார். அந்நாட்டு அதிபர் திரு **Javier Milei-**ஐ சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

- கூட்டுறவுத்துறையை வலுப்படுத்துவதற்கான நாட்டின் முதல் கூட்டுறவு பல்கலைக்கழகத்திற்கு குஜராத் மாநிலம் **Anand**-ல் மத்திய அமைச்சர் திரு அமித் ஷா இன்று அடிக்கல் நாட்டினார்.

- பிரதமர் திரு நரேந்திர மோடி உலகின் எப்பகுதிக்கு சென்றாலும் தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமைகளை பறைசாற்றி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- கைலாஷ் மானசரோவர் யாத்திரையை உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

- ஆசிய பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.

--இனி விரிவான செய்திகள்--

**<<<<<<>>>>>**

ஐந்து நாடுகளின் பயணத்தின் ஒரு கட்டமாக அர்ஜென்டினா சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்னும் சற்றுநேரத்தில் அர்ஜென்டினாவின் விடுதலை போராட்ட வீரரும், தேசிய தலைவருமான ஜென்ரல் **Jose Desanmartin** சிலைக்கு அஞ்சலி செலுத்தி தமது சுற்றுப்பயணத்தை தொடங்கவுள்ளார்.

பின்னர், அந்நாட்டு அதிபர் **Javier Milei-**ஐ சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பு உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து பேச்சு நடத்தவுள்ளார்.

கடந்த 2018-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிரேசிலின் ரியோடி ஜெனிரோவில் நடைபெற்ற ஜி-20 உச்சிமாநாட்டின்போது இருநாட்டுத் தலைவர்களும் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக பொருளாதார உறவுகள் குறித்தும், பாதுகாப்பு குறித்தும் பேச்சுக்கள் நடத்தினர்.

உலகின் தென்பகுதி நாடுகளுடன் இந்தியாவுடனான உறவை வலுப்படுத்துவதன் நோக்கமாக ஐந்து நாடுகள் பயணத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, தமது பயணத்தை தொடங்கும்முன்

வெளியிட்ட அறிக்கையில், லத்தீன் அமெரிக்க நாடான அர்ஜெண்டினாவுடனான பொருளாதார ஒத்துழைப்பு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று குறிப்பிட்டிருந்தார்.

**<<<<<<>>>>>**

நாட்டின் முதல் கூட்டுறவு பல்கலைக்கழகமான **Tribhuvan Sahakari** விஷ்வ வித்யாலயாவுக்கு குஜராத் மாநிலம் **Anand**-ல் மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், கூட்டுறவு அமைச்சகத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் 60-க்கும் மேற்பட்ட புதிய திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கோடிக்கணக்கான ஏழை எளிய மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், கூட்டுறவுத்துறை செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கூட்டுறவு இயக்கத்தில் 40 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் சேர்ந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

புதிதாக தொடங்கப்படும் கூட்டுறவு பல்கலைக்கழகம் இந்த துறையின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து அரசின் கொள்கைகளை வகுப்பதற்கு பெரிதும் உதவிடும் என்று கூறினார்.

கூட்டுறவுத்துறையின் ஆராய்ச்சிப்பணிகளுக்கும், வளர்ச்சித் திட்டங்களுக்கும் உறுதுணையாக இந்த பல்கலைக்கழகம் செயல்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

கூட்டுறவுத்துறைக்கான பணியாளர்களை உருவாக்குவது மட்டுமின்றி இத்துறையை முன்னெடுத்துச்செல்லும் தலைவர்களையும் இப்பல்கலைக்கழகம் உருவாக்கித்தரும் என்றும் திரு அமித் ஷா கூறினார்.

**<<<<<<>>>>>**

2047-ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதாரத்தை 32 ட்ரில்லியன் டாலராக உயர்த்துவதற்கான பொருளாதார மற்றும் வர்த்தக கொள்கைகள் கட்டமைக்கப்பட்டுள்ளதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

பெங்களூருவில் இன்று சென்னை இந்திய தொழில்நுட்பக்கழகத்தின் சார்பில் நடைபெற்ற "சங்கம் 2025" உலக புத்தாக்க மாநாட்டில் உரையாற்றிய அவர், 2028-ஆம் ஆண்டுக்குள் உலகில் மூன்றாவது பெரிய பொருளாதாரமாக இந்தியா உயரும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரசின் கொள்கைகளும், திட்டங்களும் எதிர்காலத்துக்கான தொழில்நுட்பத்தை உருவாக்கி வருவதாக தெரிவித்த அமைச்சர், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், குவாண்டம் கம்யூட்டிங் உள்ளிட்ட துறைகளில் நாம் வளர்ச்சியடைந்து வருவதாகவும் கூறினார்.

நாட்டின் தொழில்நுட்ப கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு முந்தைய பட்ஜெட்டில் 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்த அவர், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கத்திற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மேலும் 10 ஆயிரம் கோடி ரூபாயை மத்திய அரசு அனுமதித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையை மேம்படுத்துவதற்கு மத்திய அமைச்சரவை அண்மையில் ஒரு லட்சம் கோடி ரூபாய் அனுமதித்ததையும் திரு பியூஷ் கோயல் சுட்டிக்காட்டினார்.

**<<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி உலகின் எப்பகுதிக்கு சென்றாலும் தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் பெருமைகளை பறைசாற்றி வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கரீபியன் தீவு நாடுகளில் ஒன்றான **Trinidad-Tobago-**வுக்கு பயணம் மேற்கொண்டபோது அந்நாட்டு அதிபர் **Christine Kangaloo-**வின் பூர்வீகம் தமிழ் என்பதை அறிந்து திருக்குறளை சுட்டிக்காட்டி, அவரை வாழ்த்தியதையும் குறிப்பிட்டுள்ளார்.

வீரம் நிறைந்த படை பலம் தேச நலன் மீது அக்கறை கொண்ட மக்கள், அளக்குறையாக செல்வம் நாட்டின் நலன் அறிந்து செயல்படும் அமைச்சர், அழிக்க முடியாத ராணுவம், ஆபத்து காலத்தில் துணை நிற்கும் நட்புநாடு இவை அனைத்தும் நாட்டை வளமாக்கும் என்ற திருக்குறளின் பொருளையும் பிரதமர் எடுத்துரைத்து, பெருமை சேர்த்துள்ளார் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

**Trinidad-Tobago** நாட்டின் **'The Order of the Republic of Trinidad-Tobago '** விருது பிரதமருக்கு அந்நாடு வழங்கி கௌரவித்ததையும் டாக்டர் எல். முருகன் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**<<<<<<>>>>>**

**BIS** தர நிர்ணயத்துடன் கூடிய ஹெல்மட்டுகளையே இருசக்கர வாகன ஓட்டிகள் பயன்படுத்துமாறு மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, இந்த துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், **'BIS** தர நிர்ணயம் இல்லாத ஹெல்மட்டுகளின் உற்பத்தி மற்றும் விற்பனையை தடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

கடந்த நிதியாண்டில் 30-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டு, **'BIS** தர நிர்ணயத்தை தவறாக பயன்படுத்திய நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் மட்டும் ஆயிரத்து 500-க்கும் மேற்பட்ட தர நிர்ணயம் செய்யப்படாத ஹெல்மட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டு, ஒன்பது நிறுவனங்களின் உரிமங்கள் ரத்து செய்யப்பட்டதாகவும் நுகர்வோர் விவகாரங்கள் துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

மத்திய - மாநில அரசுகளின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டம் வரும் ஜனவரி மாதத்திற்குள் முடிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படும் என்று தமிழக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

ராசிபுரம் சட்டப்பேரவைத் தொகுதிக்கு உட்பட்ட பல இடங்களில் புதிய திட்டப்பணிகளை தொடங்கிவைத்து பேசிய அவர், ராசிபுரம் கூட்டுக்குடிநீர் திட்டம் 854 கோடி ரூபாய் மதிப்பில் நடைபெற்று வருவதாகவும், இவை அனைத்தும் 90 சதவீதம் நிறைவடைந்துள்ளதாகவும் கூறினார்.

ஐந்து கோடியே 38 லட்சம் ரூபாய் மதிப்பில் மேலும் நான்கு புதிய திட்டப்பணிகளுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

ராசிபுரத்தையடுத்த மதியம்பட்டி ஏரியில் மீன் குஞ்சுகள் இருப்பு செய்யும் பணியையும் திரு மதிவேந்தன் தொடங்கிவைத்தார்.

<<<<<<>>>>>

கைலாஷ் மானசரோவர் யாத்திரையை உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

குஜராத், தில்லி, ராஜஸ்தான், மகாராஷ்ட்ரா, உத்தரப்பிரதேசம், மேற்குவங்கம், தெலங்கானா, சத்தீஸ்கர் மாநிலங்களை சேர்ந்த 50 யாத்ரீகர்களை கொண். இந்த குழுவினர் நேற்று புதுதில்லியிலிருந்து புறப்பட்டு உத்தராகண்டின் தனக்பூர் வந்து சேர்ந்தனர்.

யாத்ரிகர்களின் முதல் குழுவை வழியனுப்பி வைத்து பேசிய முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி, கைலாஷ் மானசரோவர் யாத்ரிகர்களுக்கு தேவையான பாதுகாப்பு மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கோவிட் தொற்றுக்கு பின் நிறுத்திவைக்கப்பட்டிருந்த இந்த யாத்திரை தற்போது தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>**

அமலாக்க இயக்குனரகம் மற்றும் மத்திய புலனாய்வுப்பிரிவு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க அமெரிக்க அதிகாரிகள் நிரவ் மோடியின் சகோதரர் நேஹல் மோடியை கைது செய்தனர்.

பஞ்சாப் நேஷனல் வங்கி மோசடி மற்றும் சட்டவிரோத பணப்பரிவர்த்தனைகளில் ஈடுபட்ட நிரவ் மோடியை இந்தியா அனுப்புமாறு இந்திய புலனாய்வு அமைப்புகள் பிரிட்டன் அரசுடன் பேசிவரும் நிலையில், அமெரிக்காவில் தங்கியிருந்த அவரின் சகோதரர் நேஹல் மோடி இந்தியாவின் வேண்டுகோளையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

விரைவில் அவர் இந்தியா கொண்டுவரப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேஹல்மோடி அவரது சகோதரர் நிரவ் மோடியுடன் இணைந்து சட்டவிரோத பணப்பரிவர்த்தனையில் ஈடுபட்டதை இந்திய புலனாய்வு அமைப்புகள் உறுதி செய்துள்ளன.

**<<<<<<>>>>>**

***விளையாட்டுச் செய்திகள்***

ஆசிய பாரா வில்வித்தை போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், மூன்று வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் குழு பிரிவில் **Sheetal Devi** மற்றும் **Jyoti-**யும், கலப்பு குழு பிரிவில் **Harvinder Singh** மற்றும் **Bhawna** -வும் தங்கப்பதக்கங்களை கைப்பற்றினர்.

ஆடவர் மற்றும் கலப்பு குழு பிரிவிலும், ஆடவர் **Recurve** பிரிவிலும் இந்தியா வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை ஏழு பதக்கங்களை வென்றுள்ளது.

**<<<<<<>>>>>**

ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் போட்டியில இந்தியா இரண்டு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.

தென்கொரியாவில் நடைபெற்ற இப்போட்டியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் அனாகத் சிங்கும், 17 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் **'Aryaveer Dewan'**-னும் தங்கப்பதக்கம் வென்றனர்.

15 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் பிரிவில் **‘Sanvi Kalanki** -ம், 13 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் **‘Ayaan Dhanuka**-வும் வெள்ளிப்பதக்கம் வென்றனர்.

**<<<<<<>>>>>**

வெனிசுலாவில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியின் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில், **Prisha Goel**-ம், 17 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் **‘Sudhanshu Maini ’’** -யும் பட்டம் வென்றனர்.

**<<<<<<>>>>>**

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காவது நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன்வரை 4 விக்கெட் இழப்பிற்கு 249 ரன் எடுத்துள்ளது.

பர்மிங்ஹாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 407 ரன் எடுத்துள்ளது.

இந்தியா முதல் இன்னிங்சில் 587 ரன் எடுத்துள்ளது.

**<<<<<<>>>>>**